மாலை மலர் 18.11.2018



பயிற்சி பெற்ற மகளிருக்கு சான்றிதழ் வழங்கப்பட்ட காட்சி. அருகில் காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன், முதன்மை பொது மேலாளர் (மனித வளம்) பட்டாபிராமன் மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஊரக தொழில் முனைவோர் பயிற்சி மைய ஒருங்கிணைப்பாளர் சரண்யா உள்ளனர்.

## தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில்

# இலவச காஸ்டியூம் ஜூவல்லரி தயாரித்தல் பயிற்சி

வேலாயுதம்பாளையம், நவ. 18–

தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனத்தின் சமுதாய நலப்பணித் திட்டத்தின் சார்பில் காகித ஆலையை சுற்றி அமைந்துள்ள காகிதபுரம், புஞ்சை புகளூர், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சிகள் மற்றும் திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம், நஞ்சை புகளூர் ஆகிய ஊராட்சி பகுதிகள் உள்ளடங்கிய கிராமங்களில் வசிக்கும் மகளிர்களுக்காக கரூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஊரக தொழில் முனைவோர் பயிற்சி மையத்துடன் இணைந்து காஸ்டியூம் ஜூவல்லரி தயாரித்தல் பயிற்சி 13 நாட்கள் டி.என்.பி.எல். குடியிருப்பு வளாகத்தில் அமைந்துள்ள மனிதவள அரங்கில் நடத்தப்பட்டது.

பயிற்சி முகாமில் மொத்தம் 31 மகளிர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இப்பயிற்சி குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்காக, பகுதிநேர வேலைவாய்ப்பு மற்றும் சுய தொழில் மூலமாக வருமானம் ஈட்ட வழிவகை செய்யும் நோக்கத்துடன் நடத்தப்பட்டது.

இப்பயிற்சியில் துணி மற்றும் நூல் வகைகளை கொண்டு அணிகலன்கள் (வளையல், தோடு, செயின் முதலியவை) தயாரிக்கும் பயிற்சி முறைகளும், தயாரித்த பொருட்களை விளம்பரப்படுத்தி, வியாபாரம் செய்யும் யுக்தியும், கற்றுத்தரப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

பயிற்சியின் நிறைவு விழா நிகழ்ச்சியில் காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன், முதன்மை பொது மேலாளர் (மனித வளம்) பட்டாபிராமன் மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஊரக தொழில் முனைவோர் பயிற்சி மைய ஒருங்கிணைப்பாளர் சரண்யா ஆகியோர் கலந்து கொண்டனர்.